சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | அய்யப்பன் |
| தந்தை பெயர் | : | பன்னீர்செல்வம் |
| கிராமம் | : | எண்கண் |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 38 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன்

ஆவேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 அன்புச்செல்வனை தெரியாது. கடந்த 02.11.2025 ம் தேதியன்று திருவாரூரிலிருந்து முகந்தனூருக்கு பேருந்தில் சென்றேன். நான் பேருந்தின் 3 வது சீட்டில் அமர்ந்திருந்தேன். அப்போது சண்டை நடந்தது. பின்னர் முகந்தனூரில் இறங்கினோம். அ.சா.1 அன்புச்செல்வம் கடைக்கு போய் சாமான்கள் வாங்கினார். அப்போது, ஆஜர் எதிரி சாந்தகுமார் அ.சா.1 அன்புச்செல்வத்தை சாதியை சொல்லி, சோடா பாட்டிலால் தலையில் அடித்து விட்டார். பின்னர் கட்டையால் அ.சா.1 ன் முதுகில் அடித்து விட்டார். அதன்பின்னர் அ.சா.1 ன் அப்பா, அம்மாவிற்கு போன் செய்து வரச்சொன்னோம். அவர்கள் வந்து விட்டார்கள். அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் மறுநாள் மாலை 07.00 மணிக்கு முகந்தனூரில் விசாரித்தார்கள். விபரம் சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொத்தனார் வேலை செய்து விட்டு, மாலை 08.00 மணிக்கு வீட்டிற்கு போவேன் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததை நேரில் பார்த்தேனா என்றால், சம்பவத்தை நேரில் பார்த்தேன். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று பேருந்தில் வந்த பயணச்சீட்டை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை என்றாலும் போலீசார் என்னிடம் பயணச்சீட்டை வாங்கவுமில்லை என்று சொன்னால் சரிதான். எண்கண் முருகன் கோவில் திருவிழா சம்மந்தமாக எங்கள் தெருவாசிகளுக்கும், எதிரிகளின் தெருவாசிகளுக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். அ.சா.1 அன்புசெல்வம் எனது ஊர்க்காரர் மற்றும் தெருக்காரர், எனது உறவுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று

சொன்னால் சரிதான். அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2026.03.02 18:05:01 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.